## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## SESSIONS CASE NO. 107/2014

## Deposition of Witness for : PW 19

| | |
|---|---|
| **Name** | : திரு. செல்லபாண்டியன் |
| **Father Name** | : |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13-04-2023.**

**(A1 to A3 present)**

**முதல் விசாரணை** -

நான் தற்போது கீழ்சிறுப்பாக்கம் கொல்லக் கொட்டாய் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் எங்கள் ஊர்காரர்கள். இறந்த பாபுவும் எங்கள் ஊர் தான். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஆஜர் எதிரிகள் பாபு என்பவரை கொலை செய்தது சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும், அப்போது நான் காவல் நிலையம் சென்றேன். அப்போது போலீசார் என்னிடம் கையெழுத்து பெற்றுக் கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான் அந்த கையெழுத்துக்கள் முறையே அ.சா.ஆ. 8 மற்றும் 9. என் முன்பு எந்த ஆயுதமும் கைப்பற்றப்படவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலீசார் விசாரணையில் கடந்த 26.4.2013 அன்று போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றும், 26.4.2013 அன்று தண்ணீர்பந்தல் - கீழ்வணக்கம்பாடி ரோடில் வேடியப்பன் கோயில் அருகே நானும் எங்கள் ஊரைச்சேர்ந்த கோவிந்தராஜ் ஆகியோர் மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருந்த போது தண்டராம்பட்டு காவல் ஆய்வாளர், தண்டாம்பட்டு காவல் நிலைய குற்ற எண் 120/2013 வழக்கு சம்மந்தமாக 1ம் எதிரி சுந்தரமூர்த்தியை மதியம் சுமார் 2.15 மணிக்கு கைது செய்து விசாரித்த போது அவர் எந்த வித வற்புறுத்தலும் இன்று தாமாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதன் அடிப்படையில் ஆய்வாளர் மாலை 4.30 மணியளவில் 1ம் எதிரியை அழைத்துச் சென்று கீழ்சிறுப்பாகம் பெரிய ஏரி மேடு பக்கத்தில் உள்ள பெரிய பாறை அருகே இருந்த

கூரிய கத்தி சா.பொ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. காப்பி கலர் அரைக்கை சட்டை, வெள்ளை கலர் பெர்முடாஸ் ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அதனை ஆய்வாளர் மகஜர் முன்னிலையில் கைப்பற்றினார்கள் என்றும், அதில் நானும் கோவிந்தராஜும் கையெழுத்து போட்டோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை

ஒம்/- செல்லபாண்டியன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.